ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை




| வேணு : 11 | மார்ச்– 2006 | கானம் : 8 |
|---|---|---|


www.madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் நான்காவது ப்ரதிஷ்டாதின வைபவம்

இடம் : மதுரபுரி, மஹாரண்யம், தேதி : 30.01.2006 முதல் 02.02.2006 வரை



வேத பாராயணம் - தோகூர் ஜைமினி சாமவேத பாடசாலை



பஜனை - கல்பாக்கம் கோலாகல பஜனை மண்டலி



மூலவர் - ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள்



உத்ஸவர் - ஸ்ரீதேவி,பூதேவி ஸமேத ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸர்



வீர ஆஞ்சநேய ப்ரதிஷ்டை



பரதநாட்டியம் - ஸ்ரீமதி ஸ்ரீகலாபரத் குழுவினர்



கர்நாடக சங்கீத கச்சேரி - பம்பாய் சகோதரிகள்



திவ்யநாம
சங்கீர்த்தனம்

ஸ்ரீ ஹரி:





'சுகதாஸ்' - சத்சங்க மண்டப திறப்பு விழா, அம்பத்தூர், சென்னை. தேதி : 20.01.2006



கும்பாபிஷேகம், ஸ்ரீராமர் திருக்கோயில், ஒடுக்கத்தூர், வேலூர் மாவட்டம், தேதி : 08.02.2006



கும்பாபிஷேகம், ஸ்ரீராமர் பஜனைமடம், ரெட்டியூர், அணைக்கட்டு, தேதி : 12.02.2006



அருளுரை, சண்முகம் அவர்கள் இல்லம், ஆவடி, கோவர்த்தனகிரி, சென்னை. தேதி : 15.02.2006



வரவேற்பு, ஆனைக்குளம் கிராமம், தேதி : 17.02.2006





கும்பாபிஷேக வைபவம். இடம் : ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோயில், ஆனைக்குளம் கிராமம், திருச்சுழி அருகில், விருதுநகர் மாவட்டம். தேதி : 17.02.2006


# மதுரமுரளி

Rs. 5/-

Registered as Newspaper in India R. No. 62828 / 95

| Regd. No. TN / CC (S) DN / 119 / 06-08 | Licensed to Post without prepayment WPP NO.TN / CC (S) DN / 51 / 06-08 |
|---|---|

| வேணு : 11 | மார்ச் – 2006 | கானம் : 8 |
|---|---|---|



நூதன ஆலய கும்பாபிஷேகம்
இடம் : ஸ்ரீ கற்பக விநாயகர் திருக்கோயில்
SCM Textile Spinners Mill Complex
பாளையம்புதூர், தெக்கலூர். தேதி : 10.02.2006


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar. Website : www.madhuramurali.org;
e-mail : contact@madhuramurali.org ; publications@madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு : 11 மார்ச் 2006 கானம் : 8

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | விளக்கு ஸ்தோத்திரம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 123 | 4 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 5 |
| 4. | மாதம் ஒரு புத்தகம் | 6 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 95 | 8 |
| 6. | ஸ்ரீ சங்கரர் நூல்களில் ரஸானுபவங்கள் - 10 | 11 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை - 98 | 13 |
| 8. | மாலே மணிவண்ணா! - 42 | 15 |
| 9. | மஹான்களின் கருணை | 17 |
| 10. | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் | 20 |
| 11. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 123 | 22 |
| 12. | அன்பார்ந்த மதுரமுரளி வாசகர்களுடன் | 25 |
| 13. | செய்திகள் | 27 |


*சத்தியத்தைக் கைவிடார்! செம்புலாலுமுட்கொளார்!*
*சாதிபேதமற்றவர்! சீறினும் சினங்கொளார்!*
*வேறுமாதர் மீது பற்றுமற்றிருப்பர்! நற்றவர்!*
*நாரணன் தமர்களாய நல்ல வைணவர்களே!*

**- ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த வைஷ்ணவ ஸம்ஹிதை கீர்த்தனங்களில் ''பாகவத தர்மஸாரம்''**

ஸ்ரீ ஹரி:

# விளக்கு ஸ்தோத்திரம்

## (அந்நாட்களில் இல்லங்களில் வழக்கத்தில் இருந்தது)

*விளக்கே! திருவிளக்கே! வேந்தனுட நற்பிறப்பே!*
*ஜோதி விளக்கே! ஸ்ரீதேவி பெண்மணியே!*
*அந்தி விளக்கே! அலங்காரநாயகியே!*
*காந்தி விளக்கே! காமாக்ஷித்தாயாரே! (தேவியாரே)*
*பசும்பொன் விளக்கு வைத்துப் பஞ்சுத்திரிபோட்டு*
*குளம்போல் நெய்யைவிட்டுக் கோலமுடன் ஏற்றிவைத்தேன்!*
*பொட்டுமிட்டேன்! குங்குமத்தால் பூமாலை*
*சூட்டிவிட்டேன்!*
*ஏற்றினேன் நெய்விளக்கு எந்தன் குடிவிளங்க*
*வைத்தேன் திருவிளக்கு மாளிகையும் தான்விளங்க*
*மாளிகையில் ஜோதியுள்ள மாதாவைக் கண்டுகந்தேன்!*
*மாங்கலியப்பிச்சை மடிப்பிச்சை தாருமம்மா!*
*சந்தானப் பிச்சையுடன் தனங்களையும் தாருமம்மா!*
*பெட்டி நிறையப் பூஷணங்கள் தாருமம்மா!*
*கொட்டில் நிறையப் பசுமாடு தாருமம்மா!*
*புகழுடம்பைத் தந்து எந்தன் பக்கத்தே நில்லுமம்மா!*
*அகத்தொளி (அகத்தெளிவை) வைத்தெந்தன்*
*அகத்தினிலே வாழுமம்மா!*

*சேவித்தெழுந்து நின்றேன்! தேவி வடிவு கண்டேன்!*
*வஜ்ரக்கிரீடம் கண்டேன்! வைடூர்ய மேனி கண்டேன்!*
*முத்துக்கொண்டை கண்டேன்! முழுப்பச்சை*
*மாலை கண்டேன்!*
*சவுரிமுடி கண்டேன்! தாழைமடல் சூடக் கண்டேன்!*
*பின்னலழகு கண்டேன்! பிறைபோல நெற்றி கண்டேன்!*
*சாந்திடும் நெற்றி கண்டேன்! தாயார் வடிவு கண்டேன்!*
*குறுகிடும் நெற்றி கண்டேன்! கொவ்வைக்*
*கனிவாயும் கண்டேன்!*

*செந்தாழம்பூ மடல்போல் செவியிரண்டும் கண்டுகொண்டேன்!*
*மார்பில் பதக்கம் மின்ன மாலை அசையக் கண்டேன்!*
*காலில் சிலம்பு கண்டேன்! காலாழிப்பீலி கண்டேன்!*
*பட்டாடைதானுடுத்த பிடிஇடையைக் கண்டுகொண்டேன்!*
*மங்கள நாயகியே உன்னை மனங்குளிரக் கண்டுகொண்டேன்!*
*அன்பே! அருந்துணையே! உனை அடைந்த எந்தனுக்கு*
*வந்தவினை அகற்றி மஹாபாக்யம் தந்தருள்வாய்!*
*தந்தைதாய் பிறவி நீயே! எனைத் தற்காக்கும் ரக்ஷகியும் நீயே!*
*அந்தத்திற்குதவி செய்ய நீயே! ஆதாரமானவளும் நீயே!*
*உன்னையே உறவாக நம்பி உற்றாரைக்கைவிட்டேன் தாயே!*
*சந்தான சௌபாக்யம் அளித்து சந்துக்கள்*
*சேவை எனக்களிப்பாய்!*
*பக்தியுள்ள மனதெனக்குத் தந்து பரதேவி*
*க்ருபையுடனே அருள்வாய்!*

## அறிவிப்பு!

1995-ல் ஸ்தாபிக்கப்பட்டு, ஸ்ரீ சாந்தீபனி குருகுல ட்ரஸ்ட் வேதபாடசாலை இன்றளவும், மதுரபுரி வளாகத்திலும், சென்னையில் உள்ள ஆலப்பாக்கத்திலும் நடந்து வருகின்றது. நம்முடைய பாரததேசத்தின் ஜீவனாக இருக்கக்கூடிய வேதத்தைக் காப்பாற்றுவதில் எல்லோருடைய பங்கும் இருக்கவேண்டும் என்பது ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் விருப்பம். அதன்படி, ஒவ்வொருவரும், தங்கள் தங்கள் வீட்டிலுள்ள ஸ்வாமி படத்தின் முன்பாக ஒரு உண்டியல் வைத்து, அதன்மேல் **''வேத நிதி''** என்று எழுதி, தினமும் அதில் ஒரு ரூபாய் போட்டு வரவும். ஒவ்வொரு வருடமும், டிசம்பர் 31-ந் தேதி அதில் சேர்ந்த பணத்தை எடுத்து **ஸ்ரீ சாந்தீபனி குருகுல ட்ரஸ்ட் (Sri Sandeepani Gurukula Trust)** என்ற பெயருக்கு DD எடுத்து New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**- Trustees**

## மதுரமான ஞானியர் 123

ஆம்பூரில், ஒவ்வோர் அமாவாசை தினத்தன்றும், பௌர்ணமி தினத்தன்றும் மற்றும் வைகுண்ட ஏகாதசி போன்ற தினங்களிலும் அந்த ஊரில் உள்ள ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் கோவிலில், 'ஹரே ராம...' மஹாமந்திரக் கீர்த்தனம் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. இதில், நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு, பயன்பெற்று வருகின்றார்கள். நமது சத்சங்கத்தை சேர்ந்த ஆம்பூரில் உள்ள திரு. V. குமரேசன் மற்றும் திரு. S. மோஹன்குமார் இருவரும் இதற்குப் பொறுப்பேற்று நாமசங்கீர்த்தனத்தைச் சிறப்பாக நடத்திக் கொண்டு வருகின்றார்கள்.

சமீபத்தில், நமது சத்சங்கத்தைச் சேர்ந்த திரு. M.K. ராமாநுஜம் என்பவரை ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், ''நாமசங்கீர்த்தனம் செய்யும் இடத்திற்குச் சென்று சிறிது நேரம் பகவந்நாம மஹிமையைப் பற்றிப் பேசிவிட்டு வா!'' என்று பணித்தார்கள். பிறகு, ஸ்ரீ ஸ்வாமிஜி வேலூரிலிருந்து ஆம்பூர் வந்து, பகவந்நாம கீர்த்தனத்தில் கலந்துகொண்டு, சிறிது நேரம் அருளுரையும் வழங்கினார்கள். அப்பொழுது, திரு. M.K. ராமாநுஜமும் உடன் இருந்தார். அவர் அடைந்த வியப்பிற்கு அளவே இல்லை. அதற்குக் காரணம், அன்று திரு. ராமாநுஜம் அந்த இடத்தில் என்ன பேசவேண்டும் என்று தயார் செய்து வைத்திருந்தாரோ, அதை அப்படியே ஸ்ரீ ஸ்வாமிஜி பேசியதுதான் அவரது வியப்பிற்குக் காரணம்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : எத்தனையோ பழமையான கோவில்கள் பாழடைந்த நிலையில் இருக்கையிலே, புதுப்புதுக் கோவில்கள் நிறைய வந்து கொண்டேயிருக்கின்றனவே! அவற்றிற்கு, பூஜைகள்கூட ஒழுங்காக நடைபெறுவதில்லையே! ஏன்?*

பதில் : ‘‘கோவில் கட்டுவது புண்ணியம். கோவில் திருப்பணி செய்வது புண்ணியம்’’ என்று மக்கள் நினைக்கின்றார்கள் போலும்! அத்துடன், திருப்பணியைத் தொடர்ந்து, கோவிலில் பூஜைகளும் சரிவர நடக்க வேண்டும்; அந்தக் கோவிலை நன்றாகப் பராமரிக்கவும் வேண்டும் என்று சேர்த்துக் கருத்தில் கொண்டால், இத்தகைய குறை இருக்காது!

*கேள்வி : அநேகமாக, எல்லா மதங்களிலுமே, பெண்களுக்கு, ஆண்களுக்குச் சமமான அந்தஸ்து கொடுக்கப்படவில்லையே! ஏன்?*

பதில் : ஒரு நாட்டின் அதிபர், ஓரிடத்திற்குச் செல்கின்றார் என்றால் அவருக்காக விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்த வழியாகச் செல்லவேண்டும்; மேடையில் இந்த இடத்தில் தான் அமர வேண்டும்; கூட்டத்தில் இறங்கிவிடக்கூடாது போன்ற பல்வேறு கட்டுப்பாடுகளைக் காவல்துறையினர் விதிக்கின்றனர். அவ்வாறு செயல்படுவதன் நோக்கம், அந்த அதிபரின் பாதுகாப்பினை மனதில் கொண்டுதான் அல்லவா? நம்முடைய மதத்தின் இரண்டு முக்கியமான இதிஹாஸங்கள் ஸ்ரீமத் ராமாயணம் மற்றும் மஹாபாரதம். ஸ்ரீமத் ராமாயணத்தில், இறைவனுடைய மனைவியை ஓர் அசுரன் தூக்கிச் சென்றுவிட்டான். மஹாபாரதத்தில் ஐந்து கணவர்களை உடைய த்ரௌபதியையே கௌரவ சபையில் அவமானப்படுத்தி விட்டார்கள். இவை, பெண்களுக்கு இந்த உலகம் அவ்வளவு பாதுகாப்பானதாக இல்லை என்பதையே காட்டுகின்றது! தாயையும், பெண்ணையும் தெய்வமாக வணங்குபவர்கள் தானே நாம்? ஆகவே, பெண்களுக்குச் சம உரிமை கொடுக்கக்கூடாது என்பது எந்த மதத்தை ஸ்தாபித்தவரின் நோக்கமும் கிடையாது. பெண்களுடைய பாதுகாப்பும், அவர்களுடைய நலனும்தான், அவர்களுடைய உரிமையை விட மிகவும் முக்கியமானது என்பதைக் கருத்தில் கொண்டுதான் இவை செயல்படுத்தப்பட்டு உள்ளன.

# மாதம் ஒரு புத்தகம்

நான் சமீபத்தில், ஸ்வாமி ப்ரக்ஞானந்தா அவர்கள் எழுதிய "A search for the self - The Story of Swami Muktananda" என்ற ஒரு சுவையான நூலைப் படித்தேன். இந்நூல், மும்பை அருகிலுள்ள கணேஷ்புரியில் வீற்றிருந்து அருள் பாலித்து வந்த பகவான் ஸ்ரீ நித்யானந்தரின் சீடரும், மாபெரும் யோகியுமான ஸ்வாமி முக்தாநந்தரின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கின்றது.

1908-ஆம் வருடம் கர்நாடக மாநிலத்தில் பிறந்த 'கிருஷ்ணா' என்ற சிறுவன், இளவயது முதலே தீவிர இறைவேட்கையால் ஆட்கொள்ளப்பட்டு, இல்லம் துறந்து, பல புண்ய தலங்களிலும், காடுகளிலும், மலைகளிலும், தீவிர வைராக்யத்துடன் மனதை அடக்கி, கடுமையான ஆன்ம சாதனைகள் பழகி, இறுதியில் சத்குருநாதரான கணேஷ்புரி பகவான் ஸ்ரீ நித்யானந்தரின் தாமரைப் பாதங்களில் சரணடைந்து, அவரது அருளால் அந்நியர் ஆட்சியிலிருந்து நமது தேசம் விடுபட்ட தினமான 15-8-1947 அன்று, ஜனன-மரண பந்தத்திலிருந்து நிரந்தரமாக விடுப்பட்டு, ஆன்மீகத்தின் உச்ச நிலையான அத்வைத நிலையை உணர்ந்து, 'முக்தாநந்த பரமஹம்ஸர்'ாக மலர்ந்தார்.

குரு பக்திக்கு ஒரு இலக்கணமாகத் திகழும் ஸ்வாமி முக்தாநந்தர், குருவின் அருளால் மட்டுமே ஒருவனுக்கு ஞானம் ஏற்படுகின்றது என்று பறைசாற்றுகின்றார். ''நான் ஒரு வேதாந்தியாக, நிலையற்ற, அழியக்கூடிய பொருள்களையெல்லாம் உதறித் தள்ளினேன். ஒரு பக்தனாக, எனது இஷ்டதெய்வத்திடம் கதறினேன். ஒரு யோகியாக மூச்சை அடக்கினேன். கடைசியாக எல்லாவற்றையும் துறந்து குருவிடம் சரணடைந்தேன். ஸச்சிதானந்தத்தை அடைந்தேன்!'' என்றும், ''இந்த முக்தாநந்தனின் மனது பல்வேறு போதைகளில் சிக்கியிருந்தது. மிகவும் சிரமப்பட்டு அவற்றிலிருந்து விடுபட்டு, கடைசியில் ஒரேயொரு மாபெரும் போதையில் மாட்டிக் கொண்டுவிட்டது. அந்த போதையின் பெயர் நித்யானந்தர்!'' என்றும் தனது குருநாதரை வர்ணிக்கிறார்.

ஸ்வாமி முக்தாநந்தர் ஆரம்ப சாதனை காலத்தில் பல்வேறு சாதுக்களையும், யோகபுருஷர்களையும் தரிசித்துள்ளார். அவ்வாறு காசியில் ஒரு அவதூத சித்த புருஷருடன் சிலகாலம் வசித்து வந்தார். ஒரு சமயம், அந்த சித்தபுருஷர் அன்னதானத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். அப்பொழுது, அங்கு ஒரு குஷ்டரோகத்தினால் அவதிப்பட்ட ஒரு வயதானவர் வந்தார். இளைஞரான ஸ்வாமி முக்தாநந்தருக்கு அவரது அருவருக்கத்தக்க தோற்றத்தைப் பார்ப்பதற்கே பயமாக இருந்தது. அவரது உடலெங்கும் புண்கள் ஏற்பட்டு, சீழும், ரத்தமும் வழிந்துகொண்டிருந்தது. சகிக்க முடியாத துர்நாற்றம் வேறு!

அந்த அவதூத சித்த புருஷர் முக்தாநந்தரைப் பார்த்து, ''அந்த பெரியவரால் சாப்பிடமுடியவில்லை. நீ அவருக்கு உணவை உன் கைகளால் ஊட்டி விடு!'' என்று கட்டளையிட்டார். முக்தாநந்தர் மிகுந்த அருவருப்புடன், ஜாக்கிரதையாக அவரை தொட்டுவிடாமல் உணவை ஊட்டினார். அவரது வாயிலிருந்து சிறிது உணவுப் பருக்கைகள் கீழே சிந்தியிருந்தன. ஒருவழியாக உணவை முக்தாநந்தர் ஊட்டிமுடித்த மறுகணம், அந்த வயதானவர் மின்னல் வேகத்தில் நடந்து சென்று மறைந்துவிட்டார்.

அந்த சித்தபுருஷர் முக்தாநந்தரைப் பார்த்து, ''அந்த தட்டில் அவர் வாயிலிருந்து விழுந்த பருக்கைகள் உள்ளன அல்லவா! அவற்றை உண்டுவிடு!'' என்றார். முக்தாநந்தருக்கு தூக்கிவாரி போட்டது. வேறு வழியில்லாமல் ஒரு சிறு பருக்கையை வாயில் போட்டுக்கொண்டார். இதைப் பார்த்த அந்த சித்தபுருஷர் முக்தாநந்தரிடமிருந்து அந்த தட்டைப் பிடுங்கி சிறு தயக்கமுமின்றி எஞ்சியிருந்த உணவை உண்டார். அவர் முக்தாநந்தரிடம், ''அந்த கிழவர் மின்னல் வேகத்தில் நடந்து சென்று மறைந்ததை நீ பார்க்கவில்லையா? எங்காவது ஒரு குஷ்டரோகி அவ்வளவு வேகமாக நடந்து செல்வதை நீ பார்த்ததுண்டா? அவர் வேறு யாருமில்லை. சாக்ஷாத் காசி விஸ்வநாதரே!'' என்று கூறி சிரித்தார்.

**– டாக்டர். ஆ. பாக்யநாதன்**

# எந்தரோ மஹானுபாவுலு - 95

அடாராஹ்நாலாவை அடைந்த மஹாப்ரபுவிற்குச் சிறிது சிறிதாகப் புற உலகு நினைவு வந்தது. அங்கேயே சிந்தனையுடன் அமர்ந்துவிட்டார். இரண்டு கண்களும் அழுது அழுது சிவந்து விட்டன. புருவம் உயர்ந்து இருந்தது. சரீரத்தில் அனைத்துச் சாத்வீக **பா**வங்களும் நிரம்பி இருந்தன. அதே நிலையில் தம் பக்தர்களை நோக்கி விநயத்துடன், ''சகோதரர்களே! நீங்கள் என்னிடம் அதிகம் உபகாரம் செய்து இருக்கிறீர்கள்; வழியில் விதவிதமான ஆபத்துக்களிலிருந்து என்னைக் காப்பாற்றி இதுவரை அழைத்து வந்துவிட்டீர்கள். ஸ்ரீ ஜகன்னாதபுரியின் தரிசனமும் எனக்கு எப்படியோ செய்து வைத்துவிட்டீர்கள். இனி நான் உங்களுடன் இருக்கமாட்டேன். தயவுசெய்து நீங்கள் உங்கள் இஷ்டப்படி எங்காவது சென்றுவிடுங்கள். இதுவரைதான் உங்களை என்னுடன் வைத்துக்கொள்ள நான் விரும்பினேன்'' என்றார்.

நித்யானந்தர் தம் சிரிப்பைக் கட்டுப்படுத்திக்கொண்டு, ''எங்களை உங்களுடன் வைத்துக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் கட்டாயப்படுத்தவில்லையே! இவ்வளவு தூரம் வந்துவிட்டோம். ஜகன்னாத்ஜியைத் தரிசனம் செய்துவிட்டுப் போகலாம் அல்லவா?'' என்று கேட்டார்.

மஹாப்ரபு கம்பீரமாகத் தலையை அசைத்துக்கொண்டே, ''அது, நடக்காது! என்னுடன் நீங்கள் யாரும் வரக்கூடாது; உங்களுக்கு ஜகன்னாத்ஜியைத் தரிசனம் செய்ய வேண்டுமானால் எனக்கு முன்னால் சென்று தரிசித்துவிட்டு வாருங்கள்; இல்லையேல், நான் தரிசனம் செய்து திரும்பிய பிறகு, கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்யுங்கள்; என்னுடன் வரக்கூடாது. என்ன செய்யப் போகிறீர்கள்? எனக்கு முன்பா, பின்பா?'' என்று வினவினார்.

முகுந்ததத் சிரித்துக்கொண்டே, ''ப்ரபோ! நீங்களே முன்னே செல்லுங்கள்! நாங்கள் பிறகு வருகிறோம்'' என்றார். அவ்வளவுதான். மஹாப்ரபு, ஸ்ரீ ஜகன்னாதபுரி கோவிலை நோக்கி வேகமாக ஓடினார். ஒரு மதம் பிடித்த யானை கிராமத்துக்குள் புகுந்து ஓடுவது போல் அவர் ஓட யானையைக் கண்டு மிரண்டு ஓடும் பசுக்களைப்போல், மஹாப்ரபுவைக் கண்ட மக்கள் மிரண்டு இங்கும் அங்கும் ஓடினர்.

எதையும் கண்டு லட்சியம் செய்யாமல் மஹாப்ரபு ஓடினார். கோவிலின் சிம்ஹத்வாரத்தை அடைந்ததும் குதித்துத்தாவி நொடிப்பொழுதில் ஜகன்னாத பகவான் முன் நின்றார். சுபத்ரா, பலராம் ஆகியோருடன் ஜகன்னாத்ஜியைத் தரிசனம் செய்த மஹாப்ரபு, உன்மத்த நிலையின் உச்ச கட்டத்தையும் கடந்து, மஹாஆவேசத்துடன் பகவானின் திவ்யவிக்ரஹத்தை ஆலிங்கனம் செய்துகொள்ள கோவிலின் உள்புகுந்தார். இதற்குள் கோவில் காப்பாளர்கள் ப்ரபுவைத் தடுத்து நிறுத்தினர். ப்ரபு மூர்ச்சை அடைந்து பூமியில் விழுந்தார். உயிரற்ற சடலம்போல் ஜகன்மோஹன் இடத்தில் விழுந்து கிடந்தார். ஆயிரக்கணக்கான ஜனங்கள் பகவான் தரிசனத்தை மறந்து ப்ரபுவைத் தரிசனம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அனைவரும் சூழ்ந்துகொண்டு வேடிக்கை பார்க்க ஆரம்பித்தார்கள்.

அதே சமயம், ஒரிஸ்ஸா மஹாராஜாவின் பாடசாலையின் முக்ய உபாத்யாயரான ஆசார்யர் ஸ்ரீ வாஸுதேவ சார்வபௌமர் பகவானைத் தரிசனம் செய்யக் கோவிலுக்கு வந்திருந்தார். பகவானைச் சேவித்து விட்டு வந்தபின் அவரது த்ருஷ்டி மஹாப்ரபுவின்மீது விழுந்தது. ப்ரபுவின் அற்புத ரூபலாவண்ய மூர்த்தியைக்கண்டதும் தம்மை அறியாமல் அவரிடம் ஈர்க்கப்பட்டார். அவரது அவஸ்தையைக் கண்ட ஸ்ரீ வாஸுதேவ சார்வபௌமர் வேதாந்த சாஸ்த்ர அறிவினால் தெரிந்துகொண்டு, ஸகல **பா**வலக்ஷணங்களும் ப்ரபுவிடம் பரிபூர்ணமாகப் பொருந்தி இருந்ததைக்கண்டு ஆச்சரியம் அடைந்தார்.

மஹாப்ரபுவின் அருகில் நின்றுகொண்டு இருந்த வாஸுதேவ சார்வபௌமர், ''சாஸ்த்ரங்கள் ஸ்ரீராதாதேவிக்கு ஏற்படக்கூடிய எந்த ''அதிரூப மஹா**பா**வ''த்தை வர்ணனை செய்கின்றனவோ அதே தசையில் இந்த இளம் சன்யாஸி இருக்கிறாரே! இன்றுவரை பகவானிடம் இத்தகைய ப்ரணய **பா**வங்கள் இருக்கும் என்று சாஸ்த்ரங்களில் மட்டுமே படித்துள்ளோம். அந்த நிலையை நேரில் நான் இன்று காண்கிறேனே! இந்தச் சன்யாஸி நிச்சயம் ஒரு அசாதாரணமான திவ்யபுருஷன்தான்; சந்தேகமில்லை! கௌட தேசத்தைச் சேர்ந்தவன் போலும்!'' என்று எண்ணமிட்டுக்கொண்டு இருந்தார்.

இப்படியே நேரமாகி, பகல் ஆகிவிட்டது. பகவானுக்குப் '**போக்** நைவேத்ய வேளை' வந்துவிட்டது. ப்ரபு மூர்ச்சை தெளியவில்லை. அதனால் ஆசார்யர், கோவிலின் சேவகர்கள் உதவியைக்கொண்டு,

ப்ரபுவை அந்த மூர்ச்சை நிலையிலேயே தூக்கி அணைத்துக்கொண்டு, தம் வீட்டிற்கு அழைத்து வந்து, அவரை அழகான படுக்கையில் படுக்க வைத்தார். அவர் வீடு ஜகன்னாதர் கோவிலின் தெற்குத் திசையில் இருந்தது. இன்று அந்த இடத்தைக் 'கங்காமாதாமடம்' என்று அழைக்கிறார்கள். தம் கையைப் ப்ரபுவின் மூக்குத் துவாரத்திற்கு அருகே வைத்தார். மிகவும் மெதுவாக மூச்சு வந்து கொண்டிருந்தது. தம் குடும்பத்துடன் ப்ரபுவிற்குச் சேவை செய்தார்.

மஹாப்ரபுவின் பக்தர்கள் பின்னால் ஓடோடி வந்தனர். கோவில் வாசலில் காப்பாளர்களிடம், ''இங்கு கௌட தேசத்தைச் சேர்ந்த சன்யாஸி யாராவது சிறிதுநேரம் முன்பு தரிசனத்துக்கு வந்தார்களா?'' என்று வினவினார்கள். அவர்கள், ''ஆமாம்! வந்தார்! மிகவும் அழகாக இருந்தார். பகவானைத் தரிசனம் செய்தவர் ஏனோ உடனே மூர்ச்சையாகி விழுந்துவிட்டார். ஆசார்ய சார்வபௌமர் அவரைத் தம் வீட்டிற்குத் தூக்கிக்கொண்டு சென்றுவிட்டார். நீங்கள் அவருடன் கூட வந்தவர்களா?'' என்று கேட்டனர்.

நித்யானந்தர், ''ஆமாம்! ஆமாம்! நாங்கள் அவருடைய சேவகர்கள்! ஆசார்யர் வீடு எங்குள்ளது என்று சொல்லுங்கள்?'' என்று கேட்டு, வழி தெரிந்துகொண்டு, பகவானைக்கூடத் தரிசனம் செய்யாமல் ஆசாரியர் வீட்டை நோக்கி ஓட ஆரம்பித்தனர். இதைக் கேட்டுக்கொண்டு அங்கிருந்த சார்வபௌமரின் சகோதரியின் கணவரான ஸ்ரீகோபிநாதாசாரியர் ஏற்கெனவே முகுந்ததத்தை நன்கறிந்தவராதலால் அவர்களிடம் சென்று பரஸ்பரம் ஆலிங்கனம் செய்துகொண்டுவிட்டு, அவர்களை ஆசாரியர் வீட்டுக்குச் சென்றதும் அங்கு ப்ரபு மூர்ச்சித்த நிலையில் இருப்பதைக் கண்டனர். நாமசங்கீர்த்தனம் செய்தனர். அந்த மதுரமான குரலைக் கேட்டு, ப்ரபு சிறிது சிறிதாக நினைவு திரும்பப் பெற்றார். பக்தியுடன் தனக்குச் சிச்ரூஷைகள் செய்யும் சார்வபௌமர் மற்றும் பல புருஷர்களைக் கண்டு ப்ரசன்னமானார். மக்களின் முகத்திலும் சிறிது சிறிதாக ஆனந்தம் மலர்ந்தது. பிறகு நித்யானந்தரும் மற்றப் பக்தர்களும் ஆசார்யாரின் மகன் சந்தனேஷ்வருடன் கோவிலுக்குச் சென்று ஜகன்னாத்ஜியின் தரிசனம் செய்து விட்டு, ப்ரஸாதங்களுடன் திரும்பினார்கள். (தொடரும்)

**— ஜயந்தி ஜானகிராமன்**

# ஸ்ரீ சங்கரர் நூல்களில் ரஸானுபவங்கள்-10

**- குடந்தை என். ராமசர்மா**

எவையெல்லாம் மனம் முதலான புலன்களால் அறியப் படுவதாகுமோ அவை நானில்லை. மனம் முதலான புலன்களை அது அறியும்படி செய்யுமோ அதுவே 'நான்.'

உலகில் அறிவது மூன்று வகை. 'பளிச்'சென இது இப்படித்தான் என்று அறியக்கூடியது முதல்வகை. அறியாதது அல்லது அறிய முடியாதது இரண்டாவது வகை. அறிந்தும் அறியாமலும் இருப்பது மூன்றாவது வகை. முதலிரண்டும் அறிவின் செயல். மூன்றாவது நிஜமான 'நான்' பற்றியது. நானுக்கும் நானாக இருக்கிற 'நான்' இருக்கின்றது என்று சொல்லி, ஆப்பிள்பழம்போல் எடுத்துக் காண்பிக்க முடியவில்லை; இல்லை என்று சொல்லி மறுக்கவும் முடியவில்லை; அறிந்தேன் என்றும் சொல்ல முடியவில்லை; அறியவில்லை என்றும் சொல்ல முடியவில்லை!

விழிப்பு நிலை, கனவு நிலை, கனவற்ற உறக்க நிலை மூன்றையும் தீர்க்கமாக ஆராய்ந்தால் நானாக நான் நினைத்துக் கொண்டிருந்தவை யாவும் நானில்லை எனத் தெரிகிறது. அப்படியென்றால், நான் யார்?

अहं प्रत्ययस्यालम्बनविशेष निर्णयायाह भगवानाचार्यः ॥

*''அஹம் ப்ரத்யயஸ்ய ஆலம்பநவிசேஷ*
*நிர்ணயாய ஆஹ பகவான் ஆசார்ய:॥''*

'நான்' என்பதின் உண்மை சொரூபம் நிச்சயம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். இதன்பொருட்டே பகவான் ஸ்ரீ சங்கரர் இச்சுலோகத்தை எழுதுகிறார் என்கிறார் ஸ்ரீ மதுஸூதன ஸரஸ்வதி அவர்கள்.

நானாக இல்லாத கணக்கற்ற போர்வைகளை நம்மீது போர்த்திக் கொண்டு நம்மையே நாம் இழந்துவிடுகிறோம். போர்வைகளை உதறி எறியச் சொல்கிறார். நான் பஞ்சபூதங்களும் அல்ல. புலன்களும் அல்ல. இவற்றின் கூட்டும் அல்ல. இவை ஒன்றற்கொன்று

வேறுபட்டவை. என்னிடமிருந்தும் வேறுபட்டவை. இவை யாவும் ஜடமல்லவோ! அப்படியென்றால் நான் யார்?

எல்லாவற்றையும் கழற்றிய பிறகு எஞ்சுவது எதுவோ அதுவே நான். ***யதேகோ அவசிஷ்ட சிவ: கேவலோऽஹம்***. அது சிவம். மங்களம் பெருக்குவது. அது ஏகம், இரண்டற்றது. ஒன்றாகவே இருப்பது. அது கேவலம் எதனோடும் சம்பந்தப்படாமல் தனித்தே இருப்பது. ஒன்றாகி, உடனாகி, வேறாக இருப்பது. அது 'ஸுஷுப்த்யேக ஸித்த:' தூக்கத்தின் மூலம் மட்டும் இதன் மறுக்க இயலா இருப்பை அறிய முடிகிறது.

ஏன் தூக்கத்தின் மூலம் மட்டும் இதன் இருப்பு அறியப் படுகிறது? தூக்கத்தில் எல்லாவற்றையும் கழற்றிவிடுகிறோம். 'நான்', 'எனதும்' கூடக் கழன்றுவிடுகிறது. இதனாலேயே, 'நான் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்' என்று சொல்ல முடிவதுபோல், 'நான் தூங்கிக் கொண்டிருக்கிறேன்' என்று சொல்ல முடிவதில்லை. விழித்துக் கொண்டபின் கடந்த கால அனுபவமாகத்தான், 'நான் நன்றாகத் தூங்கினேன்' என்று சொல்லமுடியும்.

'நான் நன்றாகத் தூங்கினேன் என்ற அனுபவம் வரவேண்டும் என்றால், சாப்பிடுவதுபோல், தூக்கத்தில் நான் விழித்துக்கொண்டு தூக்கமாகிற சித்த விருத்தியின் ஒரு செயலை அனுபவித்தவனாக இருக்க வேண்டும். அங்கு, தூக்கத்தில் யார் சாட்சி? எல்லா உபாதிகளையும் கழற்றிவிட்ட விகல்பமற்ற கேவல (தனித்த) அறிவு மட்டுமே வடிவமாக உள்ள சாட்சி சைதன்யத்தின் அனுபவத்தை நாம் ஏற்கத்தான் வேண்டியிருக்கிறது.

सुषुप्तौ निर्विकल्पसाक्षिचैतन्यानुभवाङ्गीकाराच्च ।

*ஸுஷுப்தௌ நிர்விகல்ப ஸாக்ஷி*
*சைதன்ய அநுபவ அங்கீகாராச்ச ।*

'நான்' இருக்கிறேனே! என்னை என்னிடமிருந்து கழற்ற முடியாது. எனக்கு அந்நியமானவற்றையே கழற்ற முடியும். இதன் மூலம் ஆசாரியர், வேதாந்த வைதிக மதத்திற்குப் புறம்பான எல்லா வாதங்களையும் கண்டித்துவிடுகிறார். கண்டித்தலிலும் ஒரு ரஸம்.

— வளரும்

# பாலகர்களுக்கு ஒரு கதை - 98

ஒரு நாட்டினுடைய அரசன், தன்னுடைய நாட்டு மக்களை, தன்னுடைய நேர்மையான, திறமையான அரசாட்சியின் மூலம் மகிழ்ச்சியாக வைத்திருந்தான். அவனுடைய நாடும், எல்லாச் செல்வச் செழிப்பும் பெற்று விளங்கியது. இவ்வளவு இருந்தும், அந்த அரசனுக்கு ஏனோ மனதில் அமைதியில்லை; அவன் மனஅமைதி அடைவதற்கு என்ன வழி? என்று தெரிந்துகொள்ள பல ஆன்மீக நூல்களை வாங்கிப் படித்தான். அதில் 'ராம ராம' என்று ஜபம் செய்வதால் மனஅமைதி ஏற்படும் என்று கூறப்பட்டிருந்தது. அதைப் படித்துவிட்டு, அவனும் ராம நாமத்தைச் சொல்ல ஆரம்பித்தான். ஆனால், அவன் எதிர்பார்த்த மனஅமைதி கிடைக்கவில்லை.

இந்தச் சமயத்தில், ஒரு மஹாத்மா தற்செயலாக அவனுடைய அரசவைக்கு வந்தார். அரசன் அவரிடம், தன்னுடைய மனது அமைதியில்லாமல் தவிப்பதைத் தெரிவித்தான். அந்த மஹாத்மா, ''நான் உனக்கு உயர்ந்த ஒரு மந்திரத்தை உபதேசம் செய்கின்றேன். அதை ஜபம் செய்து வா! உன் மனதில் அமைதி ஏற்படும்'' என்றார். அந்த அரசனும், மிகவும் ஆர்வத்துடன், ''நீங்கள் என்ன மந்திரத்தை உபதேசம் செய்யப் போகின்றீர்கள்?'' என்று கேட்டான். அதற்கு அவர், ''எந்த மந்திரத்தை ஜபம் செய்வதால் நாம் இந்த உலகத்தில் நினைத்ததை எல்லாம் பெறலாமோ, பரலோகத்திலும் சுகத்தை அடையலாமோ, அந்த 'ராம' நாமத்தைத்தான் உனக்கு உபதேசம் செய்யப் போகின்றேன்'' என்றார்.

அதைக் கேட்டவுடன் அந்த அரசனுக்கு அலட்சியம் ஏற்பட்டது. ''ஸ்வாமி, இதைத்தான் நான் பல நாட்களாக ஜபம் செய்து வருகின்றேன். ஆனால், எனக்கு எந்தப் பலனும் ஏற்படவில்லை'' என்றான். அதற்கு அவர், ''நான் இப்பொழுது உனக்கு உபதேசம் செய்கின்றேன். அதன்பிறகு ஜபம் செய்து வா. அப்பொழுது, பலனில் வித்யாசத்தைக் காண்பாய்'' என்றார். அதற்கும் அரசன் நம்பிக்கை அடையவில்லை. இவர் சொல்வதும், நாம் தினமும் ஜபம் செய்து வரும் அதே ராம நாமம்தானே! இவர் வாயிலிருந்து வருவதால்

அப்படியென்ன வித்யாசம் நடந்து விடப்போகின்றது என்று நினைத்தான். அந்த மஹாத்மா, அரசன் இப்படி நினைப்பதைத் தெரிந்துகொண்டார்.

அப்பொழுது, அவர் திடீரென அங்குப் பக்கத்தில் இருந்த அரசருடைய படைத்தளபதிகளை நோக்கி, ''அரசனைக் கைது செய்யுங்கள்'' என்றார். முதலில், அவர் சொன்னவுடன், அங்கு இருப்பவர்களோ, அவர் ஏதோ விளையாட்டுக்காகச் செய்கின்றார் என்று நினைத்தனர். ஆனால், அவர் மீண்டும் மீண்டும் அப்படிக் கூறுவதைக் கேட்டுக் கோபம் கொண்ட அரசன், படைத் தளபதிகளைப் பார்த்து, அந்த மஹாத்மாவைக் கைது செய்யச் சொன்னான். அதற்கு, அவர்கள் உடனே உடன்பட்டு, அவரைக் கைது செய்துவிட்டனர்.

அந்த மஹாத்மா, அப்பொழுது சிரித்துக்கொண்டே அந்த அரசனைப் பார்த்துச் சொன்னார்: ''இதே வார்த்தையைத்தான் நான் இவர்களிடம் சொன்னேன். அவர்கள் செயல்படுத்தவில்லை. ஆனால், நீ சொன்னவுடன் உடனே அவர்கள் செயல்படுத்திவிட்டார்கள். பார்த்தாயா? ஏன் என்றால், உனக்கு அதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒரே சொல், உன் வாயிலிருந்து வெளிவருவதற்கும் என் வாயிலிருந்து வெளிவருவதற்கும் வித்தியாசம் உள்ளது. அதுபோல், உனக்கு மந்திரத்தை உபதேசம் செய்யும் அதிகாரத்தை இறைவன் எனக்கு வழங்கியுள்ளார். ஆகவே, அதே 'ராம' நாமத்தை என் மூலமாக உபதேசம் பெற்று, நீ ஜபம் செய்யும்பொழுது பலனில் நிச்சயமாக வித்தியாசம் உண்டு, நீ நினைக்கின்ற மனஅமைதியை என் உபதேசத்தால் பெறுவது நிச்சயம்'' என்றார்.

**ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை**

Personal Secretary to

**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**

New No. 51, Old No. 24,
7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083
Telephone : 044-24895875
email ID : contact@madhuramurali.org

என்ற முகவரிக்கு அனுப்பவும்.

# மாலே மணிவண்ணா - 42

- மஹாவித்துவான் மயிலம் வே. சிவசுப்பிரமணியன்

கொடுப்பதற்கு (இடுவதற்கு) வல்லமை உடையவன், தான் ஆசையற்றவனாக இருக்க வேண்டும் அல்லவா? அவனுக்கே ஆசை அதிகம் இருந்தால் எப்படிப் பிறருக்குக் கொடுக்க மனம் வரும்? எல்லாம் தனக்கே வேண்டும் என்ற நினைப்புத்தான் ஆசை உடையவனிடத்தில் அவ்வப்போது தோன்றி, கொடுக்கும் தன்மையைக் கெடுத்துவிடும். பகவான், வேண்டுதல் வேண்டாமை இலான், பற்று அற்றான். ஆதலின், அவன்,

*''வேண்டத் தக்கது அறிவோனாகவும்*
*வேண்ட முழுதும் தருவோன்''* (திருவாசகம் 501)

ஆகவும் உள்ளான்.

கொடுப்பதற்கு வல்லமை உடையவன், எல்லாம் உடையவனாக இருக்கவேண்டும். இல்லாதவன் எப்படிக் கொடுக்க முடியும்? ஒரு சில பொருள்கள் இருந்து, ஒரு சில இல்லாமல் போனால், இவனிடம் இல்லாத பொருளை ஒருவர் வந்து கேட்டால், இவனால் கொடுக்க இயலாமல் போகும். அதனால், யார் எது கேட்டாலும் கொடுக்கக் கூடியவனாக, எல்லாம் உடையவனாக இருக்கிறான் பகவான்! இறைவனுக்கு, 'உடையான்' என்று ஒரு பெயரும் உண்டு.

திருமகளைத் தன் இதயத்திலே கொண்டு எப்பொழுதும் ஸ்ரீயப்பதியாக விளங்கும் பகவானுக்கே 'உடையான்' என்னும் பெயர் மிகவும் பொருந்துவதன்றோ?

எல்லாம் உடையவன், ஆசை அற்றவன், தன்னை எளிமைப் படுத்திக்கொள்பவன், பிறர் நிலைக்கு இரங்கிக் கண் ஒடுபவன்; ஆகையால் கண்ணன். ஆகவே, அவனே 'இடுவதற்கு வல்லமை உடையவன் என்ற பொருளில், 'இட வல' என்ற தோத்திரம் மேலும் சிறந்து நிற்கிறது.

முதற்பொருளாகிய 'ஆய்ச்சியர்க்கு இடப்பக்கமும் வலப்பக்கமும் ஆனவனே' என்பதில் ஓர் 'அ'கரம் (இட வலவ) தேவைப்படுகிறது.

இரண்டாவதாகக் கூறப்பெற்ற, 'கொடுப்பதற்கு வல்லமை உடையவனே' என்பதற்கும் அந்த 'அ'கரம் தேவையே! கொடுப்பதற்கு என்று சொல்லாமல், இடுவதற்கு என்று பொருள்படும்படி, 'இட' என்பது உணவை நோக்கிச் சொல்லியது. எல்லாப் பொருளும் மக்களுக்குத் தேவையானாலும் அவையெல்லாம் உணவுக்குப் பின்னர்தான் வேண்டப்படும். பசித்த வயிறு நிரம்பிய பிறகுதான் மற்றைய சுகங்களை மனமும் உயிரும் தேடும். எல்லாக் கொடைகளிலும் உணவுக் கொடையின் சிறப்பு நோக்கி, 'இடுதல்' என்ற சொல்லின் மூலமாகக் கொடுத்தல் என்ற பொருளைக் குறிப்பிட்ட இலக்கியங்கள் என்பதும் இங்குக் கருதத்தக்கது.

எல்லாச் செல்வமும் உடையானாகப் பிறர்க்குக் கொடுக்கும் வல்லமை உடைய ஒருவன் தன்னை எளிமை செய்துகொண்டு ஆசைப்படும் இயல்புடையவராகிய பெண்கள் இடையே கலந்து அவர்கள் ஆடும் ஆட்டத்தில் அவர்களுக்கு இடமும் வலமும் ஆக மாறி மாறி ஆடும் இயல்பினை உடையவனாகப் பகவான் இருக்கிறான் என்பது இத் தோத்திரத்தின் திரண்ட பொருளாகக் கொள்ளலாம்.

தடாகத்தில் இறங்கித் தாமரைப்பூப் பறிக்கிறவன் தாகம் எடுத்தால், விடாய் தீர்க்க அப்படியே ஒரு கை தண்ணீர் அள்ளிக் குடித்துக்கொள்ளலாம். தண்ணீருக்காக ஓடி அலைய வேண்டுவதில்லை. அதுபோலவே, எல்லாம் தரவல்ல பகவான், தங்களோடு இடமும், வலமும் ஆக மாறி மாறி ஆடும் பேற்றைப் பெற்ற இடைப்பெண்கள் எதுவானாலும் அங்கேயே கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம் ஆதலின், ஆட்டத்திலேயே ஒன்றிவிடுகின்றார்கள் என்பதையும் இக்கருத்துத் தருகிறது.

பகவானையே பாடிக்கொண்டு சேர்ந்து ஆடுகின்ற இத்தகைய ஆட்டங்கள் வேறு எதையும் பெற விரும்புகின்ற விருப்பத்தையும் போக்கி, பகவானையே நமக்குத் தந்துவிடுகிறது என்பதை உணரும் போது மேலும் இக்கருத்தின் சிறப்பு வலியுறுகிறது. (தொடரும்)

Copyright of articles published in **'MADHURAMURALI'** is reserved. Reproduction of any article from **'MADHURA MURALI'** requires written consent from the Publisher.

# மஹான்களின் கருணை

— N. அப்பன் ஐயங்கார்

ஸத்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள் நிகழ்த்திய அற்புதம் ஒன்று உள்ளது. தேஜோமயமான தோற்றம், கருணைக் கண்கள், அன்பான மொழி, தாயின் அரவணைப்பு; அனைத்தும் ஒரு சேரக் கிடைக்கவேண்டுமெனில் தபோவனம் ஞானானந்தர் தரிசனத்தில் கிடைக்கும். எவர் வந்தாலும், ''ஆகாரம் எடுத்துக்கொள்ளலாமே!'' என்ற தாயின் அன்பு உபசரணையுடன்தான் தரிசனம் ஆரம்பமாகும். அவரால் தொடங்கிவைக்கப்பட்ட அன்னதானம், மேலும் மேலும் வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

ஒரு சமயம், ஒரு தனவந்தர் தரிசனத்திற்கு வந்தார். 1960-களில் கொடிய வியாதியாகக் கருதப்பட்ட காசநோய் (T.B) பாதிப்பால் ஒரு பக்கச் சுவாசப்பை அகற்றப்பட்டு, மற்றொரு சுவாசப்பையும் பாதிப்பிற்குள்ளாகி வந்த அன்பர் கூறக்கேட்ட ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள், ''டாக்டர், கடவுள் இல்லையே! இங்கு வைத்தியம் கிடையாது. இங்கு மணி அடித்து, பூஜை முடித்து, விபூதி கொடுப்பார்கள். இவ்விடமே இருப்போம். தங்கி இருக்க வசதி உண்டு. ஏற்பாட்டுடன் வந்துவிடுவோம்'' என்றார்கள்.

கருணாமூர்த்தியின் கடாக்ஷம் அவர்மேல் விழுந்தது. அவருக்கும் நம்பிக்கை பிறந்தது. தபோவனத்தில் வந்து தங்கி, கருணையை அனுபவிக்கலானார். சுவாமி எவ்வளவுகாலம் தங்கவேண்டும் என்று சொல்லவில்லை. அன்பரும் கேட்கவும் இல்லை. அதுதான் தெய்வ சங்கல்பம். ஒரு மகான் வலியவந்து கருணை புரியக் காத்திருப்பது, பூர்வ புண்ணியத்தால் அல்லவா?

சுவாமி கூறினார், ''இது ஆடிக் கடைசி. பிறக்கப்போவது ஆவணி. இந்த மாதம் அசுரர்கள் ஆதிக்கம். விநாயகர் தோன்றி கஜமுக அசுரனை வதம் செய்துவிடுவார். விநாயகசதுர்த்தி போகட்டும்'' என்றார். பண்டிகையும் போயிற்று. ஸ்ரீ ஜெயந்தி வந்தது. சுவாமி, அன்பரிடம் கூறினார், ''பிறந்த குழந்தை, அதைக் கொல்ல எத்தனை அசுரர்கள். கண்ணன் அவர்களை அழித்துவிடுவார். பிறகு, சொந்த இடம் போவதுபற்றி யோசிப்போம்'' என்றார். ஸ்ரீ ஜெயந்தியும் முடிந்தது. சுவாமி கூறினார், ''அசுரப்பதர்கள், முளை விட்டுக்கொண்டு

தானே இருக்கிறது. புரட்டாசி பிறந்துவிட்டது. நவராத்திரி ஆரம்பமாகும். அம்பாள் முப்பெரும் சக்திகளாகக் கொலுவிருந்து முப்பெரும் மூர்த்திகளுக்கு வில், அம்பு ஆயுதங்களைக் கொடுத்து விஜயதசமியில் அசுரப் பதர்களை அழித்தால் ஊருக்குப் போகலாமே'' என்றார். புரட்டாசி கழிந்து, ஐப்பசி பிறந்தது.

சுவாமி கூறினார், ''இந்த மாதமும் ஓர் அசுரன் தொல்லை. நரகாசுரன்! தபஸ்விகள், பத்தினிப் பெண்டிர், நீதிமான்கள் அவன் கொடுமை தாங்காமல் சிறைப்பட்டுள்ளனர். பாமா துணைகொண்டு, ஸ்ரீ க்ருஷ்ணன் நரகசதுர்த்தியில் அவனைச் சம்ஹாரம் செய்து விடுவார். உலக மக்களோடு நாமும் தீபாவளியை இங்குக் கொண்டாடி விடலாமே!'' என்றார். ஐப்பசியும் போயிற்று. கார்த்திகையும் பிறந்தது. சுவாமிக்கு தெரியாதது உண்டா! காரணம் கண்டுபிடிக்க! ஆணவம் பொல்லாதது. ஆணவத்தில் ஓர் அசுரக்கூட்டமே இருக்கிறது. ஞானம் பிறந்தால் ஆணவம் போய்விடும். ''இந்த மாதம் ஆணவத்தின் மொத்த உருவமான சூரபத்ரன்கூட்டத்தை, ஞானவடிவினன் —ஞானஸ்கந்தன் கந்தசஷ்டியில் சூரசம்ஹாரத்தை முடித்துவிடுவான். தபோவன ஞானஸ்கந்தன் அருளால் நாம் ஞானத்தைப் பெறலாமே!'' என்று கூறி முடித்தார்.

மார்கழியும் பிறந்தது. அன்பரைப் பார்த்து, ''ஸ்ரீ ஹரி கூறிவிட்டார். 'மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்' என்று. ஸ்ரீ ஆண்டாளும் அதை உறுதி செய்வதுபோல் திருப்பாவை நோன்பு இருந்து, அந்த ஸ்ரீ ஹரியை அடைந்தாள். கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா உன் தன்னை என்ற பாசுரத்தில் சேரக் கூடாதவர்கள் அசுரர்கள். அந்த அசுர சக்திகளிடமிருந்து விடுபட்டு, மார்கழி முழுவதும் விரதமிருந்து, அந்த ஸ்ரீ ஹரியின் அருளால் பூர்த்தி செய்து, பாலும் சர்க்கரையும் கலந்த அக்காரவடிசல் சர்க்கரைப்பொங்கல் உண்ணும்போது நெய் முழங்கை வழியாக ஒழுகும்படியாகச் சுற்றமும், தோழமை கலந்த கூட்டத்தோடு அனுபவித்து உண்டபின் இகத்துக்கும் பரத்துக்கும் கிடைக்க வேண்டிய நலன்கள் கிடைக்கப் பெற்றிருப்போம். மூன்று நாட்கள் கழித்து தை பிறக்கும். நமக்கும் நம்பிக்கை பிறக்கும்; ஊருக்குப் போய்விடலாம். பொங்கல் விழாவை நட்புடனும் சுற்றத்துடனும் கொண்டாடி விடுவோமே'' என்று கூறி முடித்தார்.

பாக்கியசாலியான அந்த அன்பர் எந்தப் பாதிப்பும் இல்லாமல் திட ஆரோக்யமாகப் பலகாலம் வாழ்ந்தார். சுவாமி சித்தியான பிறகும் தபோவனத்திற்கு நிறையத் தொண்டாற்றினார்.

தபோவன மஹான், தரிசனம் பெற வந்த, முன்பின் தெரியாத பாக்கியம் நிறைந்த நபரை 5 மாதங்கள் கண்களை இமை காப்பதுபோல் காத்து, ரட்சித்து, கொடிய வியாதியைப் போக்கி, புனர்ஜன்மம் அளித்தது மட்டுமல்லாமல் இந்த உண்மைச் சம்பவத்தை எவ்வளவு அழகாக நமது புராண இதிகாசங்களிலிருந்து மேற்கோள் காட்டி லீலை புரிந்துள்ளார்!


ஸ்ரீ ஹரி:

## தங்கள் கவனத்திற்கு

**ஸ்ரீ ஸ்வாமிஜியின் நூல்கள் :**

1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரைகள்
2. ஸ்ரீ ஸ்வாமிஜியின் பொன்மொழிகள்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil : Cassettes, Audio CDs, VCDs**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அமுத உரைகள் | Cassettes, VCDs |
| 2. பகவான் ரமணரின் அக்ஷரமணமாலை | Cassettes, Audio CDs |
| 3. பகவான் ரமணரின் உபதேச உந்தியார் | Cassettes, Audio CDs |
| 4. Greatness of Bhagavan Ramana | Cassettes, Audio CD |
| 5. நாம மஹிமை | Audio CD |

**கீர்த்தனங்கள் :**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனங்கள் | Cassettes, Audio CDs |
| 2. மஹாமந்திரம்-அகண்ட கீர்த்தனம் | Cassette, Audio CD |

**கிடைக்குமிடம் :**

Chaitanya Mahaprabhu Namabhiksha Kendra,
Admin. Office : New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar,
Chennai - 600 083 Phone : 044-24895875
For queries regarding Madhuramurali, Books, Audio tapes & CDs
kindly send e-mail to "publications@madhuramurali.org"

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 40

கோபிகைகளின் க்ருஷ்ணப்ரேமை என்பது மூச்சுக்காற்றைப் போன்று அவர்களுடன் தானாகத் தோன்றியது. ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தின் போது ஸ்ரீ க்ருஷ்ணனுடன் இருந்த கோபிகைகளின் நித்ய சித்தமான க்ருஷ்ணப்ரேமைக்கு ஈடாக உலகில் வேறு எதையும் கூறமுடியாது. பிறகு தோன்றிய ஜீவகோபிகளின் க்ருஷ்ணப்ரேமை அந்த கோபீ ப்ரேமையின் ப்ரதிபலிப்பு என்று சொல்லலாம்.

பீஹார் மாநிலத்தில் உள்ள ஆரா ஜில்லாவைச் சேர்ந்த ஜமீரா என்னும் கிராமத்தின் ஜமீன்தார் ஸ்ரீம்ருத்யுஞ்ஜய்ப்ரஸாத் என்பவர். அவரது மனைவியான ஸ்ரீமதி. கிரிஜாதேவி என்பவரின் க்ருஷ்ணப்ரேமை மிகவும் அலாதியானதானது. ஜமீன்தாரின் அன்பு மனைவி, இரண்டு மிக அழகான மகன்களுக்கும் இரண்டு அழகான மகள்களுக்கும் தாயார் ஆவார். வீடு முழுவதும் பணியாட்கள், தனம், தான்யம், மானம், மரியாதை, என்று இந்த உலகத்து அனைத்துச் செல்வங்களும் பரிபூரணமாக அமையப் பெற்றும், அவளுக்கு உலக வாழ்க்கை ஒரு பொருட்டுக் கிடையாது. உலகத்துச் செல்வமும், சுகங்களும், கணவன், குழந்தைகள் போன்ற உறவுகளும் அநித்யம் என்பதை நன்கு உணர்ந்து கொண்டுவிட்டாள்.

அவளது உயிர், பரமசுந்தரனும், பரமசத்யனும், பரம சுகமயமானவனும், பரமஅன்புவடிவானவனுமான ஸ்ரீ க்ருஷ்ணனிடம் ஈடுபட்டது! அவனுடன் தனக்கு ஜன்ம ஜன்மமாக சம்பந்தம் உள்ளதை அறிந்துகொண்டாள்! அந்த ஸ்ரீக்ருஷ்ணனின் நினைவில் எந்நேரமும் கண்ணீர் வடிப்பாள். ஏகாந்தத்தில் அவனை நினைத்து அழுவாள். மிகுந்த விரக்தியுடன் வாழ்நாளைக் கழித்தாள்.

கிரிஜாதேவியின் மூத்த மகன் அவனது 18-ஆவது வயதில் இறந்துவிட்டான். சில தினங்களிலேயே இரண்டாவது மகனும் இறந்தான். ஒரே ஆண்டில், இரு மகன்களையும் இழந்ததில் உலகத்தில் இருந்த கொஞ்ச நஞ்ச ஆசையும் அவளுக்கு அற்றுப் போயிற்று. அவளது மனம் இப்போது உள்முகமாகத் திரும்பிவிட்டது -

உலகில் வாழ்ந்தும் அவள் உயிரற்றவள்போல் நடந்துகொண்டாள். யாராவது பணியாள் உணவை ஊட்டினால் உண்பாள்; உடை உடுத்திவிட்டாள் உடுத்திக்கொள்வாள்; குளிப்பாட்டிவிட்டால் சிலை போல் அமர்ந்து குளிப்பாள்; அவ்வளவுதான்! ஆனால், மனதுக்குள் கண்ணனுடன் வ்ரஜ வீதிகளிலும், குஞ்ச நிகுஞ்சங்களிலும் இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு ஆனந்தமாக இருப்பாள். அவளது நிலையைக்கண்டு ம்ருத்யுஞ்ஜயப்ரஸாத் மிகவும் கவலையுற்றார்.

தமது கவலையைத் தங்கள் குலகுருவிடம் தெரிவித்தார். அவர், கிரிஜாதேவிக்கு ஸ்ரீமத்பாகவத பாடம் சொல்ல ஆரம்பித்தார். பாகவத பாடம் கேட்கக் கேட்க அவளுக்குத் தன்னை எந்நேரமும் ஆக்கிரமித்துக்கொண்டுள்ள ஸ்ரீ க்ருஷ்ணன்மீது திடமான பக்தி ஏற்பட்டது. ஒருநாள், ஸ்ரீமத்பாகவத பாடம் கேட்கையில், அவளுக்கு ஸ்ரீ க்ருஷ்ண தரிசனம் உண்டாகி அவள் மூர்ச்சையானாள். அதற்குப் பிறகு, அவளுக்குப் ப்ருந்தாவனம் செல்ல வேண்டும் என்ற தவிப்பு ஏற்பட்டு விட்டது.

ம்ருத்யுஞ்ஜய்ப்ரஸாத்துக்கு இப்போது ஒரு சங்கடம் ஏற்பட்டு விட்டது. ''கிரிஜாதேவி ப்ருந்தாவனம் சென்று ஸ்ரீ க்ருஷ்ணனைத் தரிசனம் செய்துவிட்டுத் திரும்பிவிட்டால் பரவாயில்லை. அங்கு சென்று நிரந்தரமாக அங்கேயே வசிப்பேன் என்று ஆரம்பித்துவிட்டால் என்ன செய்வது? இங்குள்ள சௌகரியங்களும் மாளிகை வாசமும் பணியாட்களும் ப்ருந்தாவனத்தில் கிடைக்குமா? மேலும், குலமரியாதை என்ன ஆவது? இன்று வரை பர்த்தாவைவிட்டு வெளியே தலையைக்காட்டாத பெண்மணி ஆயிற்றே கிரிஜாதேவி! தன் அன்பு மனைவிக்குப் ப்ருந்தாவனம் செல்ல அனுமதி தந்து விட்டால் குலகௌரவம் குலைந்து விடுமே!'' என்று கவலைப்பட்டார்.

ஆனால், கிரிஜாதேவியின் நிலைமையில், அவளை வீட்டில் வைத்துக்கொள்ளவும் முடியவில்லை. எனவே, அவரே அவளுக்குப் ப்ருந்தாவனம் செல்ல அனுமதி தந்தார்.

(தொடரும்)

**— ஜயந்தி ஜானகிராமன்**

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 123

ஜடபரதர், இறைவனை நம்பி சாதனைகளைச் செய்திருந்தால், அவர், தாம் மான்குட்டியிடம் பாசம் வைத்து, தமது சாதனைகளிலிருந்து வழுவுவதை உணர்ந்திருப்பார். அப்படி உணர்வதினால், இறைவனிடம் பிரார்த்தனை செய்து தமது பந்தத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு இருப்பார். அப்படி அவர் பிரார்த்தனை செய்துகொண்டு இருக்கும் பட்சத்தில், சம்பந்தம் அவருக்கு எப்படியாவது விட்டுப்போயிருக்கும். மான் இறந்தோ, காணாமலோ போய் இருக்கலாம். அதனால், அவருக்குத் துக்கம் ஏற்பட்டு இருக்கும். துக்கம் இருந்தாலும், ஓரிரு நாட்களில் அதிலிருந்து அவர் விடுபட்டு இருப்பார். அது மட்டுமல்ல, அந்தத் துக்கமேகூட அவரை மேலும் தீவிரமாகச் சாதனைகளில் ஈடுபட வைக்கும்.

சாதகர்களுக்கு இப்படித்தான் தடைகள் ஏற்படும் என்று இல்லை. எப்படி வேண்டுமானாலும் ஏற்படலாம். சாதகர்கள் இறைவனிடமோ, குருவினிடமோ முழுவதும் தங்களை ஒப்புவித்த மனதுடன் சாதனைகளில் ஈடுபட்டு இருக்க வேண்டும். சாதனைகளில் முன்னேற்றம் காணும்பொழுது, சிலருக்கு அதிசயமான சித்திகள் ஏற்படலாம். சிலருக்குப் புகழ் ஏற்படலாம். சிலருக்குப் பெரும் தனம் கிடைக்கலாம். இப்படி ஏற்படும் பலவும் ஆன்ம சாதனைக்குத் தடைதாம்.

உத்தமமான குருவானவர் இப்படித் தனது சீடனுக்கு அனுபவம் ஏற்படும்பொழுது சரியான வழியைக் காட்டி, இவற்றிலிருந்து சீடனின் கவனத்தைத் திருப்பி விடுவார். சீடனும், மேலும் விடாது சாதனைகளிலேயே கவனம் செலுத்துவான். தாமாக எந்தவொரு சாதகராலும் இத்தகைய தடைகளிலிருந்து விடுதலை பெற முடியாது. குருவும், இறைவனும் தம்மிடம் சரணடைந்த சாதகனை எப்படிக் காப்பாற்றுவர் என்பது அனுபவித்தோருக்குத்தான் புரியும்.

சாதகரானவர் குருவிடம் ஒப்புவித்த மனமுடையவராயும், சரணாகதி அடைந்தவராயும் இருக்க வேண்டும். அப்படியும் இருந்து, அவருக்கு குருவிடம் யாதொன்றையும் மறைக்காது இருக்கும்

எண்ணமும் இருக்குமாயின், அத்தகைய சீடனை குரு தேடி சென்று அருள் புரிகிறார். இதில் ஐயம் ஏதுமில்லை.

ஸ்வாமி விவேகானந்தர் குருநாதரான ஸ்ரீ ராமக்ருஷ்ணருக்கு அப்படித்தான் இருந்தார். ஸ்ரீ ராமக்ருஷ்ணருக்கு, விவேகானந்தரிடம் மிகுந்த பிரியம் உண்டு. விவேகானந்தர், தகுந்த தகுதிகளைப் பெற்றவர் என்பதைத் தேவி அவருக்குத் தெளிவுபட உணர்த்தி இருந்தாள். ஆரம்ப காலங்களில் நரேந்திரர், (ஸ்வாமி விவேகானந்தரின் பூர்வாஸ்ரமப் பெயர்) நரேந்த்ரர் ராமக்ருஷ்ண பரமஹம்ஸரிடம் பெருமதிப்பு வைத்திருந்ததாலும், தக்ஷிணேஸ்வரம் சென்று குருநாதரை அடிக்கடி தரிசனம் செய்வதை வழக்கமாகக் கொள்ளவில்லை. ஆனால், நரேந்திரன் தரிசனத்திற்கு வராத காலத்தில், குருதேவர் மிகவும் கஷ்டப்படுவார். அவருக்கு நரேனை பார்க்காமலிருக்க முடியாது.

ஒரு சமயம், அப்படி ஓரிரு நாட்கள் நரேன் வாராதிருந்த சமயத்தில், குருதேவர் நரேனைப் பார்க்கத் துடித்தார். நரேந்திரரும் அந்தக் காலத்தில் ப்ரம்ம ஸமாஜத்தில் ஈடுபட்டவராயிருந்ததால், கல்கத்தாவில் நடக்கவிருந்த ப்ரம்ம ஸமாஜத்தின் ஒரு கூட்டத்திற்கு நரேன் வருவார் என அறிந்து, அங்குச் செல்ல விரும்பினார். ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர் அடிக்கடி பரவச நிலைகளைப் பெற்று இருப்பார். அப்படி ஓர் பரவச நிலையிலேயே நரேனைப் பார்க்கக் கல்கத்தா சென்றார்.

ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர், அடிக்கடி பரவச நிலைகளுக்குச் செல்வதும், காளி மீது மிகுந்த பக்தி கொண்டிருந்ததும் அப்பொழுது பலருக்குத் தெரிந்து இருந்தது. ப்ரும்ம ஸமாஜத்தில் இருந்த பலரும் அவரைப் பற்றி அறிந்து இருந்தனர். பலருக்கும் அவரைப் பிடித்து இருந்தாலும் ப்ரம்ம ஸமாஜத்திலுள்ளோர் அவரை நேரே தரிசனம் செய்வதைத் தவிர்த்து வந்தனர். இதற்குக் காரணமும் இருந்தது. குருதேவர் ஒருக்கால் பிரபலமாகிவிட்டால் எங்கே தங்களது சமாஜத்திற்கு முக்கியத்துவம் இழந்துவிடுமோ என்று பயந்தனர். நரேந்திரர், ப்ரும்ம சமாஜத்தில் ஈடுபாடு கொண்டிருந்தாலும், குருதேவரிடம் பெருமதிப்பு மட்டுமின்றி, மிகுந்த அன்பும் கொண்டு இருந்தார். அது அவரது நடவடிக்கைகளில் தெரியத்தான் செய்தது.

குருதேவர் அப்படி ப்ரம்ம ஸமாஜத்திற்கு வந்தபொழுது. நரேந்திரர்தாம் குருதேவருக்கு ஏதேனும் ஆகிவிடப்போகிறதே என்று பயந்தார். அதே சமயத்தில், ப்ரும்ம ஸமாஜ நிர்வாகத்தினர், குருதேவரினால் தங்களது சமாஜத்திற்கு முக்கியத்துவம் குறைய கூடாது என்று எண்ணி, விளக்கை அணைத்துவிட்டனர். இதையே ஒரு நல்ல சந்தர்ப்பமாக எண்ணி, நரேந்திரரும் பின்வாசல் வழியாக, குருதேவரைத் தூக்கிக் கொண்டுபோய் தக்ஷிணேஸ்வரத்திற்கு கொண்டு விட்டார்.

அப்படியே குருதேவரிடம் நரேன், ''நீங்கள் தக்ஷிணேஸ்வரத்தில் அழகாக ஜப தியானங்களில் ஈடுபட்டு வருகிறீர்கள். நீங்கள் இப்படி என் மேல் ஆசை வைத்தால், ஜடபரதர் எப்படி மான் மீது ஆசை வைத்ததால், மறுஜன்மம் எடுக்க நேர்ந்ததோ, அப்படியே தாங்களும் உயர்ந்த ஆன்ம நிலையை அடையாது இறங்கி விடுவீர்கள்'' என்றார்.

குழந்தை ஸ்வபாவம் கொண்ட ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸரால் இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர் நேரே அன்னையிடம் சென்று, ''அம்மா! நரேன் இப்படிச் சொல்கிறோனே? இது உண்மையா?'' என்று கேட்டார். தேவீ அவரிடம், ''நரேனிடம் நாராயணனைக் காண்கிறாய். அதனால்தான் உனக்கு அவனிடம் மிகுந்த பற்று வருகிறது. அதில் தவறு இல்லை'' என்றாள்.

குருதேவர் அதைக் கேட்டவுடன் ஒரு குழந்தையைப் போல் துள்ளி குதித்து ஓடி வந்து, நரேனிடம், ''நீ என்னை ஏமாற்ற முடியாது. உன்னில் நான் நாராயணனைக் காண்கிறேன். அன்னை சொல்லிவிட்டாள்'' என்றார்.

நரேந்திரரும் விடுவதாயில்லை. ''உங்களுக்குப் புத்தியில் கோளாறு. அதனால்தான் இப்படிப் பிதற்றுகிறீர்கள்'' என்று சொல்லி விட்டார். மறுபடியும் குருதேவர் காளியிடம் இதுகுறித்து வினவ, காளி, ''இப்படித்தான் நரேன் ஆரம்பத்தில் பேசுவான். போகப் போக அவன் என்னையும், உன்னையும் ஒப்புக் கொள்வான்'' என்றாள்.

தகுதி வாய்ந்த சீடனுக்கு, குரு அனுக்ரஹம் செய்யத் தேடிச் செல்கிறார் என்பது இதிலிருந்து தெளிவாகிறதல்லவா.

(தொடரும்)

# அன்பார்ந்த மதுரமுரளி வாசகர்களுடன் சில வார்த்தைகள்

இதுநாள் வரையில், 1) ஸ்ரீ ஸாந்தீபனி குருகுல ட்ரஸ்ட், 2) குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன், 3) சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்திரா போன்றவற்றின் பதிவு அலுவலகமாகப் ''ப்ரேமிகபவனம்'' 2, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை-83, செயல்பட்டு வந்தது. ஆனால், சில மாதங்களுக்கு முன்பாக எல்லாவற்றையும் No. 24-A, Mangai Street, Jafferkhanpet, Chennai - 600 083 என்னும் முகவரிக்குப் பதிவு அலுவலமாக மாற்றப்பட்டது.

மேற்படி முகவரி பதிவு அலுவலமாக இருந்தபோதிலும், நிர்வாக அலுவலகம் (Administrative Office)

New No. 51, Old No. 24,
7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083
Telephone : 044-24895875 email ID : contact@madhuramurali.org

என்னும் இடத்தில் விஜயதசமியிலிருந்து இயங்கி வருகிறது.

இந்த நிர்வாக அலுவலகம், காலை 8 மணி முதல் பிற்பகல் 12 மணி வரையிலும், மற்றும் மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் திறந்து இருக்கும். திரு. S. நடராஜன் என்பவர் இந்த அலுவலகத்திற்குப் பொறுப்பாளர் ஆவார்.

மதுரமுரளி சந்தாவைப் புதுப்பித்தல், மதுரமுரளி ஆயுள்சந்தாச் செலுத்துதல். தங்களுடைய முகவரி மாறுதலைத் தெரிவித்தல், மதுரமுரளி பழைய ப்ரதிகளைக் கேட்டுப் பெறுதல், விளம்பரம் அறிவித்தல், மதுரமுரளியில் வெளியிடுவதற்கான விஷயங்களை அனுப்புதல் போன்றவற்றிற்கு, நேரிலோ, தொலைபேசியிலோ, கடிதம் மூலமாகவோ இந்த அலுவலகத்தைத் தொடர்புகொள்ளலாம்.

சத்ஸங்கத்தின் நிகழ்ச்சிகள் விபரங்கள், ஸ்ரீ ஸ்வாமிஜி பங்கு பெறும் நிகழ்ச்சிகளின் விபரங்கள், ஸ்ரீ ஸ்வாமிஜியைப் பார்க்க விரும்புவோர், அதற்கான நேரத்தைத் தெரிந்துகொள்வதற்கு, மேற்படி அலுவலகத்தைத் தொடர்புகொள்ளலாம்.

நாம் செய்துவரும் தொண்டுகளில் பங்குபெற விரும்புபவர்கள், உதாரணமாக, வேத பாடசாலை, ஆலயத் திருப்பணி, ஆஸ்ரமம்

மற்றும் பொதுத்தொண்டு இவற்றில் பங்குபெற விரும்புபவர்கள், மேற்படி அலுவலகத்தைத் தொடர்புகொண்டு, அதற்கான விவரங்களைக் கேட்டறிந்து, தாங்களும், இயன்ற அளவில் பங்குகொள்ளலாம்.

நன்கொடை அளிக்க விரும்புபவர்கள், கண்டிப்பாக ரசீதைக் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். ரசீது வரவில்லை என்றால், அதைத் தெரியப்படுத்திப் பெற்றுக்கொள்ளுதல் அவசியம்.

எல்லாக் கடிதத்தொடர்புகளையும் மேற்படி அலுவலகத்திற்குத்தான் (Administrative Office) அனுப்பவேண்டும். தங்களுடைய ஆன்மீகம் விஷயமான சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புபவர்கள், கடிதங்களை மேற்படி முகவரிக்கே அதை அனுப்பலாம். ஆனால், கடிதத்தின் மேல், "The Personal Secretary to H.H. Sri Sri Muralidhara Swamiji" என்பதை மறக்காமல் குறிப்பிட வேண்டும். திருமண அழைப்பிதழ் மற்றும் ஆன்மிக சம்பந்தமான அழைப்பிதழ்கள் போன்றவற்றை இந்த அலுவலகத்திற்கு அனுப்பினால், அவை ஸ்வாமிஜியின் பார்வைக்குக்கொண்டு செல்லப்பட்டு, ப்ரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

இந்த அலுவலகத்தின் தொலைபேசி எண். 044-24895875. இங்கு Fax வசதியும் உண்டு. மேற்படி தகவல்களுக்காக வேறு யாரையும் தொடர்புகொள்ள வேண்டாம். ஸ்ரீ ஸ்வாமிஜிக்குத் தனிப்பட்ட தொலைபேசி எண் எதுவும் கிடையாது. உபன்யாசக் கேசட்டுகள் மற்றும் மிஷன் வெளியீட்டுப் புத்தகங்கள், கோபி சந்தனம், துளசி மாலை, பெருமாள் திருப்படங்கள், போன்றவை மேற்படி அலுவலகத்தில் கிடைக்கும்.

நமது ''மதுரபுரி'' ஆஸ்ரமத்திலும், மற்றும் இதர ஸ்தாபனத்திலும் முழுநேரமாகத் தங்கி, ஆன்மீக சாதனைகள் செய்து வருபவர்கள் ஒருவரும் கிடையாது. நமது ''மதுரபுரி'' ஆஸ்ரம வளாகத்தில், பாடசாலை இயங்கி வருகிறது. பகவானுக்குப் பூஜைகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. இவற்றைக் கவனித்துக் கொள்பவர்கள் மட்டுமே அங்குத் தங்குகிறார்கள். அதாவது, பாடம் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியர், படிக்கும் மாணவர்கள் மற்றும் அவர்களுடைய உணவுத் தேவைகளைக் கவனித்துக்கொள்பவர்கள், பெருமாள் பூஜையைப் பார்த்துக்கொள்பவர்கள் மட்டுமே, முழுநேரமாக அங்குத் தங்கி உள்ளனர்.

ஒவ்வொரு வைஷ்ணவ ஏகாதசி அன்றும் காலை 8-11 வரை ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியை மதுரபுரி ஆஸ்ரமத்தில் தரிசிக்கலாம்.

# செய்திகள்

**மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயில்— நான்காவது வருட ப்ரதிஷ்டா தின வைபவம்**

ஜனவரி 30-ஆம் முதல் பிப்ரவரி 1-ஆம் தேதி வரை

தோகூர் ஜைமினி சாமவேதபாடசாலை வித்யார்த்திகளால், காலையிலும் மாலையிலும் ஜைமினி சாகை சாமவேத பாராயணம் நடைபெற்றது.

பிப்ரவரி 1-ஆம் தேதி

மதியம் 2 மணியளவில் மதுரபுரி, பாகவதபவனத்தில், கல்பாக்கம் கோலாஹல பஜனை மண்டலி அவர்களின் பஜனை நடைபெற்றது.

மாலை 5 மணியளவில், நூதன உத்ஸவர், ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸனுக்கு, ஸ்ரீ ஸ்வாமிஜி விசேஷ திருமஞ்சனம் செய்தார்கள்.

பிப்ரவரி 2-ஆம் தேதியன்று

காலையில் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு திருமஞ்சனம் நடைபெற்றது. ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸபெருமாள் நூதன வெள்ளிக் கவசத்தில் சேவை சாதித்தார்.

ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயில் வளாகத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களால் வீரஆஞ்சநேயர் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது. வீரஆஞ்சநேயருக்குத் திருமஞ்சனம், வெண்ணெய்க்காப்பு, அலங்காரம் நடைபெற்றது.

காலை 10 மணி முதல் 12 மணி வரை மஹாரண்யம் ஸ்ரீ விஷ்ணுராத பாகவதர் அவர்களால் ''ஸ்ரீ பகவன்நாம போதேந்த்ர ஸ்வாமிகள்'' அவர்களைப் பற்றி சங்கீத உபன்யாஸம் நடைபெற்றது.

மாலை 4 மணி முதல் 6 மணி வரை ஸ்ரீமதி ஸ்ரீகலாபரத் அவர்கள் மற்றும் அவரது ''தேஜஸ்'' நாட்டியப் பள்ளி மாணவியரின் ''நவவித பக்தி'' பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. நாட்டிய நிகழ்ச்சி, அனைவர் மனதையும் கொள்ளைக்கொண்டது. இரவு 7 மணி முதல்

9 மணி வரை நடைபெற்ற, பம்பாய் சகோதரிகள் ஸ்ரீமதி C. சரோஜா, ஸ்ரீமதி C. லலிதா அவர்களின் கர்நாடக சங்கீதக் கச்சேரியை அனைவரும் ரசித்து மகிழ்ந்தனர்.

இரவு 10 மணியளவில் மதுரபுரி பாகவதபவனத்தில் திவ்யநாமகீர்த்தனம் நடைபெற்றது.

**பிப்ரவரி 4-ஆம் தேதி**

மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாள் திருக்கோயிலில், உத்ஸவர் ஸ்ரீதேவி, பூதேவீ சமேத ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸனுக்கு ''ஸ்ரீநிவாஸ திருக்கல்யாணம்'' நடைபெற்றது.

**பிப்ரவரி 7-ஆம் தேதி, 8-ஆம் தேதி**

சென்னை அம்பத்தூர் அருள்ஜோதி கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற நாமஸங்கீர்த்தன மேளா வைபவங்களில், ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டு, இரவு 7 மணி முதல் 9 மணி வரை அருளுரை வழங்கினார்கள்.

**பிப்ரவரி 8-ஆம் தேதி**

காலையில், வேலூர் மாவட்டம் ஒடுக்கத்தூரில் உள்ள ஸ்ரீ ராமர் திருக்கோயில் கும்பாபிஷேகம் ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் நடைபெற்றது.

**பிப்ரவரி 10-ஆம் தேதி**

கோவை மாவட்டம், அவிநாசி அருகில் தெக்கலூர், பாளையம்புதூர், SCM Textile Spinners Mill Complexல் அமைந்துள்ள ஸ்ரீ கற்பகவிநாயகர் திருக்கோயில் நூதன ஆலய அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் நடைபெற்றது. யாகசாலை ஏற்பாடுகளும் கும்பாபிஷேக ஏற்பாடுகளும் மிகவும் விமர்சையான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. கும்பாபிஷேக தினத்தன்று காலை காலை 7½ மணி முதல் 9½ மணி வரை ஸ்ரீ ஸ்வாமிஜி அருளுரை வழங்கினார்கள். கும்பாபிஷேகத்தன்று, ஆயிரக்கணக்கான பேர்களுக்கு சிறப்பான அன்னதானம் செய்யப்பட்டது.

**பிப்ரவரி 12-ஆம் தேதி**

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு அடுத்த ரெட்டியூர் கிராமம், ஸ்ரீ ராமர் பஜனை திருக்கோயில் கும்பாபிஷேகம் ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் நடைபெற்றது.

**பிப்ரவரி 17-ஆம் தேதி**

மதுரை, திருச்சுழி அருகில் ஆனைக்குளம் கிராமம் ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி அம்மன் திருக்கோயில் அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் நடைபெற்றது.

**பிப்ரவரி 24-ஆம் தேதி**

ஏகாதசியை முன்னிட்டு, மஹாரண்யம் மதுரபுரியில், மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி திருமஞ்சனம், பூஜை செய்தார்கள். மாலையில், திருவண்ணாமலை யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரம வளாகத்தில் மாதேவகி வேதபாடசாலை ட்ரஸ்ட் சார்பில், வேத ஆராய்ச்சி மையத்தை ஆஸ்ரம அறங்காவலர் ஸ்ரீ T.S. அருணாச்சலம் அவர்கள், தபோவனம் ஸ்ரீ நித்யானந்தகிரி ஸ்வாமிகள் அவர்கள் முன்னிலையில் ஸ்ரீ ஸ்வாமிஜி தொடங்கி வைத்தார்கள். பிறகு ஸ்ரீ ஸ்வாமிஜி இரவு 7 மணி முதல் 8 மணி வரை அருளுரை வழங்கினார்கள்.

**பிப்ரவரி 26-ஆம் தேதி**

மஹாசிவராத்ரியை முன்னிட்டு வடவாம்பலம் ஸ்ரீ ஆத்மபோதேந்த்ராள் அவர்கள் அதிஷ்டானத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி பூஜை செய்தார்கள்.


**அறிவிப்பு**

மதுரமுரளி இதழில் விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன.

**கட்டண விபரம்** (*5* வரிகள் / *40* வார்த்தைகள்)

¼ Page Size Rs. 2000/-

விளம்பரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :
''மதுரமுரளி'', குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்,
Admin. Office : New No. 51, Old No. 24, 7th Avenue,
Ashok Nagar, Chennai - 600 083 Phone : 044-24895875

ஸ்ரீ ஹரி:

# சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்திரா

கலியுகத்தில், எல்லா மங்களங்களையும் பெறுவதற்கான ஒரே மார்க்கம் நாமகீர்த்தனம் என்பதை நமது ஸ்வாமிஜி ஓயாது கூறி வருவதை அனைவரும் அறிவர். அதிலும், மஹாமந்திரம் என போற்றப்படும்

*''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।*
*ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே'' ॥*

என்கின்ற இந்த மந்திரத்தை அனைவரும் கீர்த்தனம் செய்வதற்காக ஆங்காங்கே, ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஆசிகளுடன், நம் நாட்டிலும், வெளிநாடுகளிலும், தங்களின் வீட்டிலோ பொதுவான இடத்திலோ வாரந்தோறும் நாமகீர்த்தனம் செய்து வருகின்றனர்.

இவ்வாறு தவறாமல் நாமகீர்த்தன ஸத்ஸங்கம் செய்து வரும் அன்பர்கள், தங்களின் ஸத்ஸங்க விபரங்களைக் கேந்திராவிற்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.

1. விபரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :
   சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா,
   Admn. Office : New No. 51, 7th Avenue, Ashok Nagar,
   Chennai - 600 083. Ph : 044-24895875
2. அனுப்ப வேண்டிய விபரங்கள் :
   - ஸத்ஸங்கம் நடத்துபவரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி எண்
   - ஸத்ஸங்கம் நடக்கும் நாட்கள்
   - பங்குகொள்வோர் பற்றிய விபரங்கள்
   - ஸத்ஸங்கம் நிகழ்ச்சியின்பொழுது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்

வருகின்ற காலங்களில் இவ்வாறு நாமகீர்த்தன ஸத்ஸங்கம் செய்யும் அன்பர்கள் எல்லாரையும், கோயில் கும்பாபிஷேகம் அல்லது உற்சவ நாட்கள் போன்ற சந்தர்ப்பங்களில் ஒரே இடத்தில் வரவழைத்து நாமகீர்த்தனம் நடத்தவேண்டும் என்பது நமது ஸ்வாமிஜியின் அவா.

ஆகவே, நாமகீர்த்தன ஸத்ஸங்கம் நடத்தும் அனைத்து அன்பர்களும் மேற்கூறிய விபரங்களை உடனே கேந்திரா அலுவலகத்திற்கு அனுப்புமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

**ராதே கிருஷ்ணா!**

Sri Hari:

**SATSANG**

From 01-03-06 to 07-03-06 Between 7.00 p.m. and 8.00 p.m.

## "UPADESA SARAM"

Talk in English

by

**SRI. M.K. RAMANUJAM**

Venue : Sri. K. Venkataramani

BS2 Pallava Heights, Old No. 73/1, New No. 54, 5th Street,

Luz Avenue, Mylapore, Chennai - 600 004. Phone : 43536553

## SATSANG

You are cordially invited to attend a satsang at Main Hall, Bharathiya Vidya Bhavan, Mylapore, Chennai-4 on the auspicious day of **TAMIL NEW YEAR** (14-04-2004)

### Programme Details

| | | |
|---|---|---|
| Topic | : | **"THE POWER OF BHAGAWAN NAMA"** |
| Talk in English by | : | Sri M.K. Ramanujam, B.E.,<br>General Manager - MNC |
| Date | : | Friday the 14th April 2006 |
| Time | : | 7 p.m. to 9 p.m. |

Contact No. 9840743343

## "உபன்யாஸம்"

by **குமாரி பூர்ணிமா குமாரஸ்வாமி**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10-03-2006 | - | வெள்ளி | - | 5.00 - 6.30 p.m. | - | குரு ப்ரபாவம் |
| 11-03-2006 | - | சனி | - | 5.00 - 7.00 p.m. | - | நாம ப்ரபாவம் |
| 12-03-2006 | - | ஞாயிறு | - | 6.00 - 8.30 p.m. | - | விட்டலன் ப்ரபாவம் |

இடம் : அருள்மிகு ஸ்ரீ ரகுமாயி சமேத ஸ்ரீ பாண்டுரங்கஸ்வாமி திருக்கோயில்
No. 42, வெங்கடாசலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகளின் விபரம்

| | |
|---|---|
| 10-3-2006 | ஏகாதசி, இடம் : மதுரபுரி, மஹாரண்யம் கிராமம். |
| 12-03-2006<br>இரவு 7-9 | அருளுரை<br>இடம் : ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி திருக்கோயில்,<br>சங்கரன்பாளையம், வேலூர். தொடர்புக்கு : 9443324465 |
| 16-03-2006<br>இரவு 7-8 | அருளுரை<br>இடம் : பகவான் யோகிராம்சுரத்குமார் மந்திர்<br>ஒசூர். தொடர்புக்கு : 04344-224047 |
| 18-03-2006<br>மாலை 6-8 | அருளுரை<br>இடம் : பெருமாள் கோவில் வளாகம்,<br>பெரியகுளம், தேனி மாவட்டம். |
| 19-03-2006 முதல்<br>23-03-2006 வரை | அருளுரை<br>இடம் : சிவன் கோவில் வளாகம், தூத்துக்குடி.<br>தொடர்புக்கு : 0461-2310185 |
| 25-03-2006 | ஏகாதசி, இடம் : மதுரபுரி, மஹாரண்யம் கிராமம். |
| 27-03-2006 முதல்<br>06-04-2006 வரை | ஸ்ரீமத் ராமாயணம் - உபன்யாஸம்<br>ப்ரஹ்மஸ்ரீ தாமோதர தீக்ஷிதர்<br>இடம் : ப்ரேமிகபவனம், ஜாபர்கான்பேட்டை,<br>சென்னை - 83. |
| 07-04-2006 | ஸ்ரீ ராமநவமி<br>இடம் : ப்ரேமிகபவனம்,<br>ஜாபர்கான்பேட்டை, சென்னை - 83 |
| 09-04-2006 | ஏகாதசி<br>இடம் : மதுரபுரி, மஹாரண்யம் கிராமம். |
| 10-04-2006 | அருளுரை<br>இடம் : ராம் நகர் வைதீக சபா, கோயமுத்தூர்.<br>தொடர்புக்கு : 9894161819 |
| 12-04-2006 | அருளுரை<br>இடம் : திருவல்லிக்கேணி, சென்னை |
| 13-04-2006<br>14-04-2006 | தமிழ்ப்புத்தாண்டு தினத்தை ஒட்டி ''ராதா கல்யாணம்''<br>இடம் : Dr. V. கனகராஜன், 1273, 28வது தெரு,<br>கம்பர் காலனி, அண்ணாநகர், சென்னை-40<br>தொடர்புக்கு : 044-26180097 |
| 17-04-2006 | ''ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் - ஸ்ரீரங்கம்'' துவக்கவிழா<br>இடம் : ஸ்ரீரங்கம், திருச்சி. தொடர்புக்கு : 0431-2436299 |